5. அறிக்கை அளித்தல்

பொதுத் துறையினால் பராமரிக்கப்படுகின்ற அரசு விருந்தினர் இல்லங்கள்பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

THIRU K. VEZHAVENDAN : Mr. Speaker, Sir, I rise to present the Report of the Committee on Estimates on State Guest Houses maintained by the Public Department.

3. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(ஆ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு குடியரசுத் தலைவர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித் துள்ளார்கள்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்டமுன்வடிவைப் பேரவைக்கு அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு ஒருங்கிணைந்த மருத்துவப் பயிற்சியாளர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஒருங்கிணைந்த மருத்துவப் பயிற்சியாளர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவை இப் பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.